தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிளை நிலையங்கள்.

*வினா எண். 559—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் இயங்கி வரும் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தில் உள்ள கிளை நிலையங்களை 100 கிளை நிலையங்களாக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : இல்லை.

[முற்பகல் 9–20]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளில் இந்தத் திட்டம் இருக்கிறது. பல்வேறு ஒன்றியங்களில் இல்லாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டே இதைப்பற்றி எடுத்துக் கூறினேன். அடிக்கடி அந்தப் பகுதிகளில் கால்நடைகளுக்கு நோய்வந்து, அவைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, தஞ்சை மாவட்டம் முழுவதும் தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் இரண்டு செயற்கை கருத்தரிக்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு செயற்கை நிலையத்தின்கீழும் 25 கிளைகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்குமேல் நிலையங்கள் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. கோவில்பட்டி அழகர்சாமி கேட்கிறார்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே பல கால்நடை கிளை நிலையங்களில் போதிய லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டுகள் இல்லாமல் மூடப்பட்டிருக்கின்றன. அப்படி செயல்படாமல் இருப்பது உண்மைதானா? ஆகவே, இமேலாவது அதிகப்படியான லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டு பதவிகள்

1979 மார்ச் 31]

ஏற்படுத்தி, இப்படி மூடப்பட்ட கால்நடை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கிளை நிலையங்கள் திறப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடை ஆய்வாளர்களுக்கு போதிய அளவு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அப்படி ஆய்வாளர்கள் இல்லாமல், வேக்சினேட்டர்கள் அந்தப் பணியினைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 576.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மருத்துவமனையை விரிவாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் அதிகமாக 20 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு நீண்டநாட்களாக மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டு இருக்கிறது. அதற்கான முயற்சி என்ன எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையை விஸ்தரிப்பதற்கு மேலும் ஒரு பகுதி கட்டப்பட வேண்டுமென்ற மக்களுடைய கோரிக்கை வரப்பெற்று, அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கின்ற படுக்கைகளோடு இன்னும் 12 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவைக் கட்ட வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டு, இயக்குநர் அப்படி அனுப்பி வைத்தார் என்றாலும், 1979–80 ஆம் ஆண்டுக்கான பகுதி திட்டமாக அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கத்திலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், முதன்மை வரிசையிலே அது இடம் பெறவில்லை.